5th September 1958]

(இ) அவைகளில் எத்தனை—

(1) முனிசிபாலிடிகளிலும்,

(2) முதல் தர பஞ்சாயத்துக்களிலும் இயங்குகின்றன ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) 50 (fifty).

(*b*) Rs. 2,86,580.

(*c*) (1) 2 (two) in municipalities.

(2) 25 (twenty-five) in major panchayats.

SRI M. C. MUTHUKUMARASWAMY : சார், தனியாக இயங்கும் பம்பு செட்டுகள் உள்ள இடங்களில் எல்லாம் நல்ல வசதி உள்ளவர்கள் இருக்கிறார்கள். குடிதண்ணீருக்கு வேண்டிய கிணறுகளும் அங்கே கட்டப் பட்டிருக்கின்றன. இதற்காகப் பத்துப் பதினைந்தாயிரம் ரூபாய்க்கு மேலும் செலவாகிறது. அநேகம் கிராமங்களில் உள்ள சேரி மக்கள் குடிப்பதற்கு கூடத் தண்ணீர் இல்லாமல்—கிணறுகள் கூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே முதலில் குடிப்பதற்குக் கிணறுகளாவது இந்தப் பகுதிகளில் வெட்டிக் கொடுத்து உதவி செய்யும் வரையில் தானாக இயங்கும் பம்பு செட்டுகளை வசதி உள்ள இடங்களில் வைப்பதைக் கொஞ்சம் தள்ளி வைப்பார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்போது குடிதண்ணீர் வசதி இல்லாத இடங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுக்கப் படுகிறது. எல்லா இடங்களுக்கும் ஒரே சமயத்தில் கொடுக்க முடியாது. கொஞ்சம் கொஞ்சமாகத்தான் எல்லா இடங்களுக்கும் வசதி செய்து கொடுக்கப்படும்.

SRI K. B. S. MANI : தானாக இயங்கும் குடி தண்ணீர் பம்பு செட்டுகள் முனிசிபாலிடிகளில் வாங்கி வைக்கப்பட்டிருக்கின்றன. தஞ்சை ஜில்லாவில் உள்ள தானாக இயங்கும் குடிதண்ணீர் பம்பு செட்டுகள் மொத்தம் 50 என்று கனம் அமைச்சர் தமது பதிலில் கூறினார். அவைகளில் கிட்டத் தட்ட 40-க்கு மேற்பட்டவை பெரும்பாலும் வேலை செய்யாமல் இருக் கின்றன. அவைகள் பி. எஸ். ஜி. பம்பு செட்கள். ரீடா பம்பு செட்டு கள் என்ற பம்பு செட்டுகள் நல்ல பம்பு செட்டுகளாக இருக்கின்றன. அவைகள் குறைந்த விலைக்குக் கிடைக்கின்றன. அவைகளை உபயோகித் தால் மின்சாரமும் மிச்சமாகிறது. அவைகள் தஞ்சாவூரிலேயே கிடைக் கின்றன. அவைகளை உபயோகிக்க அனுமதித்தால் தஞ்சாவூரிலுள்ளவர் கள் உள்ளூரிலேயிருந்து பம்பு செட்டுகளை வாங்கிக் கொள்ளும் சௌகரி யத்தை அடைவார்கள். ஆகவே சர்க்கார் ரீடா பம்பு செட்டுகளை பரிட்சார் த்தமாக உபயோகித்து, பலன்களை அறிந்து அந்த பம்பு செட்டுகளை உபயோகிப்பதற்கு உத்தரவு போடுமா ?

THE HON. SRI M. A. MANICKAVELU : இந்த அரிய யோசனையை கனம் அங்கத்தினர் எழுத்து மூலம் தெரிவித்தால் அதை கவனிக்கிறோம்.

Spinning mills

*58 *Q.*—SRI K. RAMACHANDRAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) the number of spinning mills in the State ;

(*b*) the quantity of yarn produced from these mills in 1957–58 ;

(*c*) the quantity consumed by handlooms and powerlooms in 1957–58 ;

[5th September 1958

(*d*) the quantity, if any, exported; and

(*e*) whether there is any proposal to control the price of mill-made yarn?

THE HON. SRI R. VENKATARAMAN : (*a*) 106.

(*b*) 162·9 million lb.

(*c*) No figures are available separately for handlooms. The total quantity offered for civil consumption was 223·72 million lb.

(*d*) 7·87 million lb.

(*e*) No, Sir.

SRI K. RAMACHANDRAN : *சில சமயங்களில் இங்குள்ள கைத்தறி நெசவாளர்களுக்கு சரிவர நூல் கிடைக்காததால் அவர்கள் அதிக விலை கொடுத்து நூல் வாங்க வேண்டியிருக்கிறது. அப்படியிருக்கும்போது, ஏற்றுமதி செய்யவேண்டிய அவசியம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.*

THE HON. SRI R. VENKATARAMAN : *கனம் அங்கத்தினர் குறிப்பிடும் நிலைமை சரியானது அல்ல. நிலைமை அப்படி இல்லை. கைத்தறி நெசவாளர்களுக்கு இப்போது நூல் போதுமான அளவு கிடைக்கிறது : அவர்களுடைய தேவைக்கு அதிகமாகவே நூல் இருக்கிறது என்றுகூடச் சொல்லலாம். நூல் விற்பனையாகாமல் தேக்கமாயிருக்கிறது என்பதுதான் இப்போதைய புகார்.*

SRI M. KALYANASUNDARAM : *நூலை ஏற்றுமதி செய்வதற்கு அனுமதித்த பிறகு கைத்தறிக்குக் கிடைக்கும் நூலின் விலை உயர்ந்திருக்கிறது என்பதை கனம் மந்திரி அறிவாரா? நூல் விலை உயர்வைத் தடுப்பதற்கு என்ன நடவக்கை எடுக்கப்படும் ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *இதற்கு கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.*

SRI A. GOVINDASAMY : *கைத்தறி நெசவாளர்களின் நூல் பிரச்னையைத் தீர்ப்பதன் பொருட்டு, கைத்தறி நெசவாளர்கள் அதிகமாக இருக்கும் காஞ்சிபுரம் போன்ற பிரதேசங்களில் நூல் உற்பத்தி மில்லைத் துவக்க அரசாங்கம் முன்வருமா ?*

THE HON. SRI R. VENKATARAMAN : *டெக்ஸ்டைல் விசாரணைக் கமிட்டியார், இனிமேல் புதிதாக நூல் மில்கள் வைக்கக்கூடாது என்று கூறியிருக்கிறார்கள்.*

SRI M. JAGANNATHAN : What is the position with regard to the foreign demand for the cloth produced by the handlooms in our State?

THE HON. SRI R. VENKATARAMAN : We are trying to expand the foreign market and in places where sufficient propaganda has been done, there is a good demand for our handloom cloth.

5th September 1958]

DR. (SRIMATHI) SATYAVANIMUTHU : நமது மாநிலத்திலுள்ள நூற்பு ஆலைகள் எத்தனை என்று கனம் அமைச்சர் கூறுவாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : There are 106 spinning mills and 22 composite mills.

SRI S. NAGARAJA MONIGAR : நூல் விற்பனையாகாமல் ஏராளமாகத் தேங்கியிருக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினார். நம் ராஜ்யத்திலுள்ள 106 நூற்பு ஆலைகளில் எத்தனை ஆலைகள் நஷ்டத்தில் வேலை செய்கின்றன என்று கனம் அமைச்சர் கூற முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு, கனம் அங்கத்தினர் தனிக் கேள்வி போட்டால் விவரமாக பதில் சொல்லுகிறேன்.

SRI K. S. G. HAJA SHERIFF : May I know the amount of foreign exchange earned by the export of this yarn?

THE HON. SRI R. VENKATARAMAN : That information is available only with the Central Government.

SRI V. SANKARAN : நமது ராஜ்ய நூற்பு ஆலைகளில் நூற்கப்படும் மொத்த நூலில், நெசவிற்காக நம்முடைய ராஜ்யத்திலேயே உபயோகிக்கப்படும் நூல் எவ்வளவு, நெசவிற்காக வேறு ராஜ்யங்களுக்குக் கொடுக்கப்படும் நூல் எவ்வளவு, கைத்தறிகளுக்குக் கொடுக்கப்படும் நூல் எவ்வளவு என்பனவற்றை விகிதாசாரப்படி கனம் அமைச்சர் கூற முடியுமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member must give me notice for answering this question.

SRI M. R. KANDASWAMI MUDALIYAR : நூல் அதிகம் தேங்கிக் கிடக்கிறது என்று கனம் அமைச்சர் கூறினார். நூலின்விலை சற்றுக் குறைந்தவுடன் ஏற்றுமதிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டு விடுகிறது. ஏற்றுமதிக்கு லைசென்ஸ் கொடுக்கப்பட்டவுடன் நூலின் விலை ஏறிவிடுகிறது. நூல் விலை உயர்வால் நெசவாளர்கள் கஷ்டப்படுவதால், நெசவாளர்களின் தேவைக்குப்போக மீதியை ஏற்றுமதியாகும்படி பார்த்துக்கொள்ள கனம் அமைச்சர் முயற்சி செய்வாரா ?

THE HON. SRI R. VENKATARAMAN : The hon. Member may give notice of a separate question. Because, I do not accept the position that there has been a rise in prices.

SRI M. D. RAMASAMY : தென் பிராந்தியங்களில் பருத்தி நூலைவிட செயற்கைப் பட்டு நூல்தான் அதிகம் தேவைப்படுகிறது. இங்குள்ள கைத்தறி நெசவாளர்கள் செயற்கைப் பட்டு நூல் கிடைக்காமல் கஷ்டப்படுவதால், அவர்களுக்கு தேவையான அளவு செயற்கை பட்டு நூல் கிடைக்கச் செய்வதற்கு சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா?

THE HON. SRI R. VENKATARAMAN : இந்த ராஜ்யத்திற்கு செயற்கைப் பட்டு நூல் அதிகம் கொடுக்கவேண்டுமென்று மத்திய சர்க்காருக்கு கடிதங்கள் எழுதியிருக்கிறோம்.

SRI A. MARIAPPAN : பஞ்சு இறக்குமதிக் குறைவினால் நூலின் விலை ஏறியது சர்க்காருக்குத் தெரியுமா?

THE HON. SRI R. VENKATARAMAN : இதற்கு கனம் அங்கத்தினர் ஒரு தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன். நூலின் விலை ஏறியிருக்கிறது என்று சொல்வதை நான் ஒத்துக்கொள்ளவில்லை என்று நான் ஏற்கனவே சொன்னேன்.